**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 96/2021 PW .2**

| | |
|---|---|
| பெயர் : நவீன்குமார் | தந்தை/கணவர் பெயர்: உதயகுமார் |
| ஊர் : | தாலுகா : |
| வயது : | தொழில் : |
| ஜாதி : | சமயம் : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.07.2026

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**13.07.2026 சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. எதிரி எனது உறவினர் ஆவார். எனது அம்மாவின் சித்தி மகன் ஆவார். போலீஸ் விசாரணையில் எதிரி உறவினர் என்று சொல்லவில்லை என்றால் பேச்சு வார்த்தை கிடையாது அதனால் சொல்லவில்லை. அ.சா.1 சம்பவம் நடந்த 10 நிமிடம் கழித்து கூப்பிட்டார். நான் 5 நிமிடத்தில் சென்று விட்டேன். நான் போகும் போது அ.சா.1 மட்டும் சுயநினைவுடன் இருந்தார். சம்பவ நேரம் இருட்டான நேரம். அ.சா.1 என்னை சூரக்குடி அண்ணாநகரில் இறக்கி விட்டு சென்றார். சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது. சம்பவம் நடந்து கொண்டிருந்த போதே நான் சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது எதிரி என்னை கடந்து சென்றார் என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

2. போலீஸ்சார் முதலில் காவல் நிலையம் சென்றபோது விசாரித்தார். பின்னர் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு தான் மருத்துவமனைக்கு சென்றோம். அ.சா.1 சம்பவ இடத்திற்கு சென்ற போது பயன்படுத்திய வாகனத்தின் பதிவெண் மற்றும் எதிரியின் வாகனத்தின் பதிவெண் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. இருட்டில் வாகனத்தின் பதிவெண் தெரியவில்லை. அ.சா.1 சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும், அ.சா. 1

பக்கத்து வீட்டை சேர்ந்தவர் மற்றும் நான் வேலை செய்யும் முதலாளி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.